# SCIENCE – ONE MARK BOOK QUESTIONS
# X th STD.

## உயிரியல் – பகுதி – அ

1. மெண்டல் தோட்டப் பட்டானி (பைசம் சைட்டைவம்) செடியில் 7 வகையான மாற்று உருவ வேறுபாடுகளை கண்டறிந்தார். கீழ்கண்டவற்றில் ஒரு வகை வேறுபாடு மாறி உள்ளது. எதுவெனக் கண்டுபிடி. ( தண்டின் உயரம், நெட்டை, குட்டை / விதை, நிறம், மஞ்சள், பச்சை / மலரின் அமைவிடம் நுனி, அச்சு / ***தண்டு அமைப்பு மென்மையானது – கடினமானது*** )

2. ஆதி மனிதன் தோன்றியது ( ***ஆப்பிரிக்கா,*** அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இந்தியா )

3. கீழ்கண்டவற்றுள் எது பாரம்பரியத் தன்மைக் கொண்டது. ( ***மரபணு மாற்றம் செய்யப்பட்ட விந்தணு*** , விந்தகத்தில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட ஜீன்கள், கருச்செல்லில் மரபணு மாற்றம் செய்யப்பட்டவை, பால் மடிச் செல்லில் மரபணு மாற்றம் செய்யப்பட்டவை )

4. இயற்கைத் தேர்வு கோட்பாட்டை வெளியிட்டவர்.
( ***சார்லஸ் டார்வின்,*** ஹியூகோ–டீ–வாரிஸ், கிரிகர் ஜோகனன் மெண்டல், ஜீன் பாப்டைஸ் லாமார்க் )

5. உடற் செல் ஜீன் சிகிச்சை முறை என்பது. ( விந்துச் செல்லில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது, தலைமுறையில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது, ***உடற்செல்லில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது,*** உடலில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது )

6. சரியான நலத்தின் பரிணாமம் எதுவெனத் தேர்ந்தெடுத்து எழுது.
திரு X தொற்று நோயிலிருந்து குணமடைகிறார். திரு Y தினமும் இன்சுலின் ஊசிப் போட்டுக்கொள்கிறார்.
திரு Z மிகவும் மன அழுத்தத்தில் உள்ளார். ***திரு K தினமும் தன் கடமையினை செய்கிறார் மகிழச்சியாக உள்ளார்.***

7. சமுகத்தில் சுமுகமற்ற பரிமானத்தை தேர்ந்தெடுத்து எழுது.
ஒருவர், பிறந்த நாள் விழாவில் மகிழச்சியுடன் பங்கேற்க்கிறார்.
***சாதாரண செயல்களிலும் கடுமையாக நடந்துக் கொள்கிறார்.***
சூழ்நிலைகளுக்கு ஒப்ப சரி செயது செயல்படுகிறார்.
தன் உடல் நலமற்றத் தாயை மருத்துவமனையில் சென்று கவனித்துக் கொள்கிறார்.

8. கீழ்கண்டவற்றுள் எது பாக்டீரியாவால் உண்டாகும் நோய் ? மூளைக்காச்சல், வெறிநாய்க்கடி, ***இரணஜன்னி,*** பெரியம்மை

9. கீழ்கண்டவற்றுள் காற்றின் மூலம் பரவும் நோயினைக் கண்டுபிடி. ***காசநோய்*** , மூளைக் காய்ச்சல், டைபாய்டு, காலரா.

10.மிகக் கடுமையான மலேரியாக் காய்ச்சலை உருவாக்கும் கிருமி. ( பிளாஸ்மோடியம் ஒவேலே, பிளாஸ்மோடியம் மலேரியா, ***பிளாஸ்மோடியம் பால்சிபாரம்,*** பிளாஸ்மோடியம் வைவாக்ஸ் ).

11. நமது உணவுக் குடல் பகுதியில் நோய் உண்டாக்கும் நுண்ணுயிரி.__________பிளாஸ்மோடியம் வைவாக்ஸ், ***என்டமிபா ஹிஸ்டலைட்டிகா,*** டிரிப்போனோசோமா கேம்பியேன்சி, டீனியா சோலியம்.

12. மறைமுகமாக நோய் பரவும் முறை, ( சளிச் சிந்துதல், வாய் வழியாகத் தெரித்தல், தாய் சேய் இணைப்பு திசு, ***நோயாளிப் பயன்படுத்தும் உடமைகள்*** )

13. பிற உயிரிகளிடமிருந்து பிரித்தெடுக்கப்பட்ட எதிர் பொருட்கள், மனிதருக்கு நோய்த் தடுப்பூசியாக போடப்படுகிறது. இது எவ்வகை தடுப்பூசி முறை. A. செயற்கையான செயல் மிகு நோய் தடுப்பு முறை. B.***செயற்கையான மந்தமான நோய் தடுப்பு முறை.***
C.இயற்கையான செயல் மிகு நோய் தடுப்பு முறை. D.இயற்கையான மந்தமான நோய் தடுப்பு முறை.

14. பிறந்தக் குழந்தைக்கு முதலில் கொடுக்கப்படும் நோய்த் தடுப்பூசி. (வாய் வழி போலியோ, DPT, DPT மற்றும் போலியோ, ***BCG)***

15. கீழ்கண்டவற்றை எதிர் தோன்றி (ஆன்டிஜென்) இல்லாதது எது ?
( நோய்க் கிருமி, நோய்க் கிருமியின் நச்சு, புது வகையான புரதம், ***தாய்ப்பால்*** )

16. ஒற்றை முனை நியூரான்கள் காணப்படும் இடம் _____. அ) மூளை ஆ) தண்டுவடம் இ) ***கருவாக்க நரம்பு திசு*** ஈ) முதிர்ந்த நரம்பு திசு

17. உணர் உறுப்புகளில் அடங்கியுள்ளது ________________ அ) ஒற்றை முனை நியூரான்கள் ஆ) ***இருமுனை நியூரான்கள்***
இ) பல முனை நியூரான்கள் ஈ) மெடுல்லேட்டட் நியூரான்கள் (மயலினுறை நியூரான்கள்)

18. நமது உடலின் மனவெழுச்சி பிரதிவினைகளைக் கட்டுப்படுத்தும் மூளையின் பகுதி _________
அ) சிறுமூளை ஆ) பெருமூளை இ) தலாமஸ் ஈ) ***ஹைபோதலாமஸ்***

19. மூளைத்தண்டின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது எது ? அ) முன் மூளை மற்றும் நடு மூளை ஆ) ***நடு மற்றும் பின் மூளை***
இ) முன் மற்றும் பின் மூளை ஈ) முன் மூளை மற்றும் தண்டு வடம்

20. தண்டு வட நரம்புகள் என்பவை அ) உணர்ச்சி நரம்புகள் ஆ) இயக்கு நரம்புகள் இ) ***கலப்பு நரம்புகள்***
ஈ) மூளையோடு பின்னிப் பிணைந்துள்ளவை.

21. கழுத்துப் பகுதியில் காணப்படும் ஒரு நாளமில்லா சுரப்பி _______ அ) அட்ரீனல் சுரப்பி ஆ) பிட்யூட்டரி சுரப்பி
இ) ***தைராய்டு சுரப்பி*** ஈ) கணையம்.

22. எக்சோகிரைன் மற்றும் என்டோகிரைன் ஆக செயலாற்றும் நாளமில்லா சுரப்பி எது ?
அ) ***கணையம்*** ஆ) பிட்யூட்டரி இ) தைராய்டு ஈ) அட்ரீனல்

23. ஒவ்வொரு 100 மி.லி. இரத்தத்தில் காணப்படும் இயல்பான இரத்த சர்க்கரையின் அளவு ____________
அ) 80 – 100 மி.கிராம் ஆ) ***80 - 120 மி.கி*** இ) 80 - 150 மி.கி ஈ) 70 - 120 மி.கி.

24. நோய்த்தொற்றுதலை எதிர்க்கும் T லிம்போசைட்கள் எந்த உறுப்பில் மாறுபாடு அடைகின்றன ?
அ) பாராதைராடீடுடு சுரப்பி ஆ) நிணநீர் சுரப்பி இ) ***தைமஸ்சுரப்பி*** ஈ) அட்ரீனல் சுரப்பி

By,
**S. Saravanan.M.Sc(PHY).,B.Ed., S.M.H.Hr.Sec.School. Sirkali-609110. Nagai-Dt.**

25. மியாஸிஸ் – Iல் ஒத்திசைவான குரோமோசோம்கள் ஜோடியுருதல் நிலை ________________________ ஆகும்.
அ) லெப்டோடீன் ஆ) ***சைகோடீன்*** இ) பாக்கிடீன் ஈ) டிப்ளோடீன்
26. ஒரு செல் உயிரிகளான அமீபா மற்றும் பாக்டீரியங்களில் நடைபெறும் இனப் பெருக்க வகைகளில் ஒன்று.
( துண்டாதல்; ***இரண்டாகப் பிளத்தல்;*** அரும்புதல்; ஸ்போர் உண்டாதல் ).
27. பூக்கும் தாவரங்களின் பாலினப் பெருக்க முறையில் நடைபெறும் முதல் நிகழ்வு.
( கருவுறுதல்; முளைத்தல்; மீண்டும் உருவாதல்; ***மகரந்தச் சேர்க்கை)***
28. கீழ்கண்டவற்றில் சரியான கூற்று எது ? ( நகரும் திறனற்ற, மெல்லிய சுவரையுடையவை சூஸ்போர்கள்; சில ஆல்காக்கள்,பாக்டீரியங்கள் மற்றும் பூஞ்சைகளில் உண்டாகும் நகரும் தன்மையுடைய பாலிலா ஸ்போர்கள், ஏகைனெட்டுகள்; ***பூஞ்சைகளில் உண்டாகும் ஓர் உட்கரு கொண்ட நகரும் திறனற்ற பாலிலா ஸ்போர்கள், கொனிடியா,***
( சாதகமற்ற சூழ்நிலைகளில் ஆல்காக்களில் உண்டாகும் தடித்த சுவரையுடைய உடலச் செல்கள் எப்ளானோஸ் போர்கள்.)
29. கருவுற்ற சூற்பை கனி ஆகும். ஒரு மலரின் பல இணையாத சூலக இலைகள் கொண்ட மேல்மட்ட சூற்பையிலிருந்து உருவாகும் கனி. ( ***திரள்கனி,*** கூட்டுக் கனி; தனிக்கனி; பலகனி )
30. நீரில் ஊறவைத்த விதையை அழுத்தும்பொழுது இதன் வழியாக நீர் கசிகிறது.
( இலைத்துளை; லெண்டிசெல்; ***மைக்ரோபைல்,*** முளைவேர் )
31. மாங்கனி, கல்போன்ற கனி என்றழைக்கப்படுகிறது. ஏனெனில் இதன் ( கனி வெளித்தோல், தோல் போன்றது; கனி நடுத்தோல் கல் போன்றது; கனி உட்தோல் சதைப்பற்றுள்ளது; ***கனி உட்தோல் கடினமானது.*** )
32. <u>தவறான கூற்றை தேர்ந்தெடு.</u> ( இருவித்திலை தாவர விதையில் காணப்படும் குட்டையான செங்குத்தான வெண்மையான பகுதிக்கு ரஃபே என்று பெயர்; இரு வித்திலை தாவர விதையில் காணப்படும் மிக நுண்ணிய துளைக்கு மைக்ரோபைல் என்று பெயர்;
( ***கருவில் தண்டு உருவாகும் பகுதிக்கு முளைவேர் என்று பெயர்,*** கருவில் வேர் உருவாகும் பகுதிக்கு முளைவேர் என்று பெயர். )
33. கீழ்கண்ட கூற்றுக்களில், காற்றின் மூலம் கனி பரவுதலுக்கான சரியான கூற்றை தேர்ந்தெடு.
( கனிகள் மற்றும் விதைகள் திடீரென்று வெடித்து பரவுகிறது;
***டிரைடாக்ஸ் தாவரத்தில், புல்லி வட்டம், பாப்பாஸ் தூவிகளாக மாறி கனி பரவுதலுக்கு உதவுகிறது;***
சாந்தியம் தாவரங்களில் கனிகள் கூரிய முட்கள் மூலம் பரவுகிறது;
தென்னையின் கனி நடுத்தோல் நார் போன்று உள்ளது. )
34. மூவிணைவினால் உண்டாகும் திசு கருவின் வளர்ச்சிக்கு ஊட்டம் அளிக்கவல்லது.
( சைகோட்; சூல் ஒட்டுத் திசு; ஸ்கூட்டெல்லம்; ***கருவூண்)***
35. தன் மகரந்தச் சேர்க்கையின் தீமை. ( மகரந்தத் தூள்கள் வீணாவதில்லை; ***விதைகள் குறைந்த எண்ணிக்கையில் உண்டாகின்றன;*** இருபால் மலர்களில் கட்டாயமாக நடைபெறுகிறது; மலர்களது மகரந்தச்சேர்க்கைக்கு வெளிக்காரணிகளை சார்ந்திருக்கஅவசியமில்லை )
36. உணர் மீசை ரோமங்கள் காணப்படும் விலங்கு. ( வௌவால், யானை, மான், ***பூனை*** )
37. யானையின் தந்தங்கள் ______ பல்லின் மாறுபாடு ஆகும்.
( ***வெட்டுப் பற்கள்,*** கொரிக்கும் பற்கள், கடவாய் பற்கள், மேலன்னம் )
38. நான்று அறைகளுடன் கூடிய வயிறு உடைய விலங்கு. ( யானை, டால்பின், ***மான்,*** கங்காரு )
39. மனிதனின் சராசரி உடல் வெப்பநிலை. ( ***$98.4 – 98.6^0$ F***, $96.6 – 96.8^0$ F, $94.4 – 98.6^0$ F, $98.4 – 99.6^0$ F )
40. மிட்ரல் வால்வு ____________________________ இடையில் காணப்படுகிறது. i) வலது ஆரிக்கில் வலது வெண்ரிக்கில்
ii) ***இடது ஆரிக்கில் இடது வெண்ரிக்கில்*** iii) வலது வெண்ரிக்கில், நுரையீரல் தமனி iv) இடது வெண்ரிக்கில், பெருந்தமனி
41. மானோட்ரோபாவில், உணவுப் பொருட்களை உறிஞ்சுவதற்கான சிறப்பான வேர்கள்.
( ஹாஸ்டோரியங்கள்; ***மைக்கோரைசா வேர்கள்,*** பற்று வேர்கள்; வேற்றிட வேர்கள் )
42. ஈஸ்ட்டின் காற்றில்லா சுவாசத்தினால் உண்டாவது ( லாக்டிக் அமிலம்; பைருவிக் அமிலம்; ***எத்தனால்,*** அசிடிக் அமிலம் )
43. நீர்த் தேவைக்காக தென்னையின் வேர்கள், தாய் த் தாவரத்தை விட்டு வெகு தொலைவில் உள்ளன. அத்தகைய வேர்களின் இயக்கம் ( ஒளிச் சார் இயக்கம்; ஈர்ப்புச் சார்பு இயக்கம்; ***நீர் சார்பு இயக்கம்,*** வேதிச்சார் இயக்கம் )
44. தாவரங்களில் சைலத்தின் பணி. ( ***நீரைக் கடத்துதல்,*** உணவைக் கடத்துதல்; அமினோ அமிலத்தை கடத்துதல்; ஆக்சிஜனை கடத்துதல்).
45. தற்சார்பு ஊட்டமுறைக்கு தேவைப்படுவது. ( $O_2$ மற்றும் நீர்; பச்சையம்; சூரிய ஒளி; ***இவை அனைத்தும்*** )
46. பொருட்களின் தொகுப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் சிதைவடையும் பொருட்களைக் கொண்ட தொகுப்பினை தேர்ந்தெடு. ( ***புல், மலர்கள், தோல்;*** புல், கட்டை மற்றும் பிளாஸ்டிக்; பழத்தோல், கேக் மற்றும் பிளாஸ்டிக்; கேக், கட்டை மற்றும் புல் )
47. கீழ்கண்டவற்றில் எது உணவுச் சங்கிலி ? ( புல், கோதுமை, மா; ***புல், ஆடு, மனிதன்,*** ஆடு, பசு, யானை; புல், மீன், ஆடு )
48. இவற்றில் எவை சூழ்நிலையை பாதுகாக்கும் நடைமுறைகள். (பொருட்கள் வாங்க துணிப்பையை எடுத்துச் செல்லுதல்; பயன்படுத்தாதபோது மின் விளக்குகள் மின் விசிறிகளை அனைத்தல்; பொது போக்குவரத்தை பயன்படுத்துதல்; ***மேற்கண்ட அனைத்தும்)***
49. கருப்புத் தங்கம் என்றழைக்கப்படுவது. ( ஹைடிரோகார்பன்கள், கரி, ***பெட்ரோலியம்,*** ஈதர் )
50. பொருத்தமற்றதை நீக்குக. ( தாவரங்கள், வெட்டுக்கிளி, தவளை, ***புலி,*** பாம்பு )
51. பசுமை வேதியியலினால் உண்டாகும் பொருளுக்கு எடுத்துக் காட்டு.
( பிளாஸ்டிக்; காகிதம்; ***உயிரி பிளாஸ்டிக்;*** ஹேலஜன் சுவாலை குறைப்பான் ).

*By,*
**<u>S. Saravanan.M.Sc(PHY).,B.Ed., S.M.H.Hr.Sec.School. Sirkali-609110. Nagai-Dt.</u>**

52. ______பசுமையக வாயு வெப்பநிலை மாற்றம் மற்றும் புவி வெப்பமாதலை ஏற்படுத்துகிறது.
( ஹைட்ரஜன்; ஆக்சிஜன்; நைட்ரஜன்; ***கார்பன்–டை–ஆக்சைடு***)
53. _______ குள சூழ்நிலைத் தொகுப்பில் சிதைப்பவைகள் ஆகும். (தாவரங்கள்; ***பாக்டீரியங்கள்;*** தவளை; தாவர நுண்ணுயிர்கள் )
54. மேகங்களைத் தூண்டி செயற்கையாக மழை பெய்ய உதவும் வேதிப்பொருள். ( ***பொட்டாசியம் அயோடைடு;*** கால்சியம் கார்பனேட்; கந்தக–டை–ஆக்சைடு; அம்மோனியம் பாஸ்பேட் )
55. படிம எரிபொருளுக்கு எடுத்துக்காட்டு. ( தாமிரம்; இரும்பு; மக்னீசியம்; ***கரி***)
56. நீரினால் உண்டாகும் நோய்க்கு எடுத்துக்காட்டு. ( சொறி சிரங்கு; கினியாபுழுநோய்; பார்வைக் குறைபடு; ***டைபாய்டு***)
57. படிந்த மற்றும் மிதக்கும் பொருட்களை இந்த சுத்திகரிப்பு முறையால் நீக்கலாம். ( ***முதல்நிலை சுத்திகரிப்பு;*** இரண்டாம் நிலை சுத்திகரிப்பு; மூன்றாம் நிலை சுத்திகரிப்பு; மேற்பரப்பு சுத்திகரிப்பு).
58. எது திரும்பப் பெற இயலாத வளம் ( கரி; பெட்ரோலியம்; இயற்கை வாயு; ***அனைத்தும்***).
59. இயற்கை வாயுவில் காணப்படும் முதன்மையான பொருள். ( ஈதேன்; ***மீத்தேன்;*** புரோபேன்; பியூடேன் )

## வேதியியல் – பகுதி –அ

60. உண்மைக்கரைசல் என்பது, கரைபொருள் கரைப்பானால் ஆன ஒரு படித்தான கரைசல். சாக்பீஸ் துகள்கள் தண்ணீரில் கலந்த கரைசல் பல படித்தான கலவையாகும். இது உண்மைக் கரைசலா ? ***உண்மைக்கரைசல் அல்ல, இது தொங்கல் ஆகும்.***
61. நீரைக் கரைப்பனாகக் கொண்ட கரைசல் நீர்த்த கரைசல் ஆகும். கார்பன்டைசல்பைடைக் கரைப்பானாகக் கொண்ட கரைசல் ___________ ஆகும். ( நீர்த்த கரைசல், ***நீரிலி கரைசல்***)
62. உப்பின் கரைதிறன் 100கிராம் தண்ணீரில் 36கிராம் ஆகும். 20கிராம் உப்பு நீரில் கரைக்கப்பட்டால் தெவிட்டிய நிலையை அடைய இன்னும் எத்தனை கிராம் உப்பு தேவைப்படும். ***16கிராம்***
63. இரண்டு திரவங்கள் ஒன்றிலொன்று கரையுமானால் அத்திரவங்கள் ___________ எனப்படும்.
( ***இரண்டறக் கலப்பவை,*** இரண்டறக் கலவாதவை )
64. சூரிய ஒளி நும் வகுப்பின் ஜன்னல் வழியே வரும்போது, அதன் பாதை தெரிவதன் காரணம் ஒளியின் ___________
( பிரதிபலிப்பால், ***சிதறலால்)***
65. ஒரு கரைசலின் துகள்கள் மீ நுண்ணோக்கி வழியே தெரிவதனால் அக்கரைசல் ___________ எனப்படும்.
( உண்மைக் கரைசல், ***கூழ்மக் கரைசல்***)
66. இருமடிக் கரைசலில் உள்ள உறுப்புகளின் எண்ணிக்கை. ( ஒன்று / ***இரண்டு)***
அ) ஆழ்கடல் முத்துக் குளிப்பவர்கள் சுவாசிக்கப்பயன்படுத்தும் வாயுக்கலவை _____ ( ***ஹீலியம்– ஆக்ஸிஜன்,*** ஆக்ஸிஜன் – நைட்ரஜன்).
67. புவியின் மணற்பரப்பு ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் நைட்ரஜனை தன்னுள் கொள்ளமுடியாநிலை ___________ எனப்படும்.
( ***தெவிட்டிய நிலை,*** தெவிட்டாத நிலை )
68. கீழ்கண்ட உதாரணங்களிலிருந்து ஐசோடோப், ஐசோபார்களை அடையாளம் காண்க.
${}_{18}Ar^{40}$, ${}_{17}Cl^{35}$, ${}_{20}Ca^{40}$ , ${}_{17}Cl^{37}$ ***i) ஐசோடோப் - $_{17}Cl^{35}$, $_{17}Cl^{37}$ ii) ஐசோபார் – $_{18}Ar^{40}$, $_{20}Ca^{40}$***

69. நைட்ரஜனின் மூலக்கூறு நிறை 28. அதன் அணு நிறை 14. நைட்ரஜனின் அணுக்கட்டு எண்ணைக் காண்க.

$$\text{நைட்ரஜனின் அணுக்கட்டு எண்} = \frac{\text{நைட்ரஜனின் மூலக்கூறு நிறை}}{\text{நைட்ரஜனின் அணு நிறை}} = \frac{28}{14} = 2$$

70. ஆக்ஸிஜனின் கிராம் மூலக்கூறு நிறை 32கி அதன் அடர்த்தி 1.429 கி/க.செமி. ஆக்ஸிஜனின் கிராம் மூலக்கூறு பருமனைக் கண்டறிக.

$$\text{கிராம் மோலார் பருமன்} = \frac{\text{கிராம் மோலார் நிறை}}{\text{வாயுவின் அடர்த்தி STPயில்}}$$

$$\text{ஆக்ஸிஜனின் கிராம் மோலார் பருமன்} = \frac{\text{ஆக்ஸிஜனின் கிராம் மோலார் நிறை}}{\text{ஆக்ஸிஜன் வாயுவின் அடர்த்தி STPயில்}} = 32 / 1.429 = 22.4 \text{ லிட்டர்}$$

***∴ கிராம் மோலார் பருமன் = 22.4 லிட்டர் STPயில்***

By,
**S. Saravanan.M.Sc(PHY).,B.Ed., S.M.H.Hr.Sec.School. Sirkali-609110. Nagai-Dt.**

71. Cl என்பது குளோரின் அணுவையும், $Cl_2$ என்பது குளோரின்மூலக்கூறையும் குறிப்பவை எனில் அணுக்களுக்கும், மூலக்கூறுகட்கும். உள்ள வேறுபாடுகளை அட்டவணைப்படுத்துக

| | அணு | மூலக்கூறு |
|---|---|---|
| 1 | வேதிவினையில் ஈடுபடும் ஒரு தனிமத்தின் மிகச்சிறிய துகள் அணுவாகும். | ஒரு தனிமம் அல்லது ஒரு சேர்மத்தின் மிகச் சிறிய துகள் மூலக்கூறாகும். |
| 2 | அணு என்பது பிணைப்புறாத் துகள் | மூலக்கூறு என்பது பிணைப்புற்ற துகள் |
| 3 | அணு என்பது தனித்தோ, சேர்ந்தோ காணப்படும் | மூலக்கூறு தனித்துக் காணப்படும் |

72. ஹைட்ரஜனின் அணுநிறை 1 கி. ஆக்ஸிஜனின் அணுநிறை 16 கி எனில் நீரின் கிராம் மூலக்கூறு நிறையை கணக்கிடுக.

தீர்வு $H_2O$ = 2[H] + 1[0]

= [2x1+1x16] கிராம்

நீரின் கிராம் மூலக்கூறு நிறையை= <u>18 கிராம்</u>

73. ஒரு மோல் அளவுள்ள எந்த வேதிப்பொருளும் $6.023 \times 10^{23}$ துகள்களைப் பெற்றிருக்கும் $3.0115 \times 10^{23}$ துகள்கள்கொண்ட $CO_2$ வின் மோல்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுக. ***<u>மோல்களின் எண்ணிக்கை = மூலக்கூறுகளின் எண்ணிக்கை</u>***

***$6.023 \times 10^{23}$***

= ***<u>$3.0115 \times 10^{23}$</u>***

***$6.023 \times 10^{23}$***

= ***<u>0.5 மோல்</u>***

74. $Zn + 2\ HCl \rightarrow ZnCl_2 + H_2\uparrow$

மேற்கூறிய வினை எந்த வகை வினையைச் சார்ந்தது. அ) கூடுகை வினை ஆ) இரட்டை இடப்பெயர்ச்சி வினை

இ) ***<u>இடப்பெயர்ச்சி வினை</u>*** ஈ) சிதைவுறுதல் வினை

75. செம்பழுப்பு நிறமுள்ள 'X' என்ற தனிமத்தைக் காற்றுடன் வெப்பப்படுத்தும்போது 'Y' என்ற கருப்பு நிற சேர்மத்தைத் தருகிறது. 'X' மற்றும் 'Y' என்பது _________ ( ***<u>Cu, CuO</u>*** / Pb, PbO ).

76. ஒரு மாணவன் pH தாளைக் கொண்டு தூய நீரின் pHஐ சோதித்தான். pH தாள் பச்சை நிறத்தைக் காட்டியது. எலுமிச்சை பழச் சாறை நீரினுள் விட்டபின் காகிதம் _________ நிறமாக மாறியது ( பச்சை / ***<u>சிவப்பு</u>*** / மஞ்சள் ).

77. வேதி எரிமலை என்பது ( கூடுகை வினை / ***<u>சிதைவுறுதல் வினை</u>*** )

78. லெட் நைட்ரேட் படிகங்களை அதிக அளவு வெப்பப் படுத்தும் பொழுது அது _________ வாயுவைக் கொடுக்கிறது மற்றும் அந்த வாயுவின் நிறம் _________. ***<u>நைட்ரஜன் டை ஆக்சைடு / செம்பழுப்பு</u>***

79. சில்வர் நைட்ரேட் மற்றும் சோடியம் குளோரைடு நீர்க் கரைசல்களைக் கலக்கும்போது _________ வீழ்படிவு உடனடியாகக் கிடைக்கிறது. ( ***<u>வெள்ளை</u>*** / மஞ்சள் )

80. அலுமினியம் சல்பேட் கரைசலிலுள்ள அலுமினிய உலோகத்தை துத்தநாகம்இடப்பெயர்ச்சி செய்கிறது.

( ***<u>துத்தநாகம் அலுமினியத்தைவிட வினைத்திறன் மிக்கது</u>*** / அலுமினியம் துத்தநாகத்தைவிட வினைதிறன் மிக்கது )

81. பற்சிதைவைத் தடுக்க நாம் தினமும் பல் துலக்க வேண்டும். பொதுவாக பயன்படுத்தப்படும் பற்பசை ***<u>காரத்</u>*** தன்மை கொண்டது.

82. அசிட்டிக் அமிலத்தில் வினிகர் உள்ளது. தயிரில் உள்ள அமிலம் _________ (***<u>லாக்டிக் அமிலம்</u>*** / டார்டாரிக் அமிலம்)

83. $pH = -\log 10\ [H+]$. ஒரு கரைசலின் ஹைட்ரஜன் அயனியின் செறிவு 0.001M எனில் அதன் pH மதிப்பு _________ ( ***<u>3</u>*** / 11 / 14 ).

84. நவீன தனிம வரிசை அட்டவணையில் தொடர்களும், தொகுதிகளும் உள்ளன. வரிசைகளும், தொகுதிகளும் முறையே

அ) ***<u>கிடைமட்ட தொடர்கள், செங்குத்து வரிசைகள் (தொகுதிகள்).</u>*** ஆ) செங்குத்துப் வரிசைகள் (தொகுதிகள்) கிடைமட்ட தொடர்கள்.

85. மூன்றாவது வரிசையில் 8 தனிமங்கள் உள்ளன. அவற்றில் எத்தனை அலோகங்கள் உள்ளன ? ***<u>விடை : 5</u>***

86. அனைத்துக் கரிமச் சேர்மங்களுக்கும் அடிப்படையான தனிமம் ------ தொகுதியில் உள்ளது.

( ***<u>14வது தொகுதியில்</u>*** / 15வது தொகுதியில் )

87. தாதுவிலிருந்து உலோகமானது லாபகரமானதாக பிரித்தெடுக்கப்படுகிறது. அலுமினியமானது பாக்ஸைட்டிலிருந்து பிரித்தெடுக்கப்படுகிறது. இது ---- என அழைக்கப்படுகிறது. ( ***<u>தாது</u>*** / கனிமம் ).

88. தங்கம் என்ற தனிமமானது சேர்மமாக கிடைப்பது இல்லை. இது காற்று அல்லது நீருடன் வினைபுரிவது இல்லை. இது ------ நிலையில் உள்ளது. ( ***<u>தனித்தநிலை</u>*** / சேர்ந்த நிலை )

89.. உறுதிப்படுத்துதல்: காப்பர் பாத்திரங்களை தூய்மைப்படுத்தப்படவில்லை எனில் பச்சை நிற படிமம் தோன்றுகிறது.

காரணம்: இந்தப் படிமத்திற்கான காரணம் கார தாமிர கார்பனேட்.

அ) ***<u>உறுதிப்படுத்துதல் காரணம் இரண்டும் சரி</u>*** ஆ) உறுதிப்படுத்துதல் சரி காரணம் சரியல்ல.

90. சல்ஃபைடு தாதுவை அடர்ப்பிக்கப் பயன்படும் முறை ------- ( ***<u>நுரை மிதப்பு முறை</u>*** / புவியீர்ப்பு முறை )

*By,*

**<u>S. Saravanan.M.Sc(PHY).,B.Ed., S.M.H.Hr.Sec.School. Sirkali-609110. Nagai-Dt.</u>**

91. இரும்பு உலோகப் பரப்பின் மீது வேறு உலோகத்தைப் பூசுவதால் துருப்பிடித்தலில் இருந்து தடுக்கலாம். இந்த இரும்பின் மீது துத்தநாகத் துகளை மெல்லியதாக பூசினால் அதற்கு ------- என்று பெயர்.
( ***துத்தநாக முலாம் பூசுதல்*** / வண்ணப்பூச்சு அடித்தல் / எதிர்முனை பாதுகாத்தல் )

92. எந்த உலோகம் பாதரசத்துடன் சேர்ந்தாலும் அதற்கு இரசக்கலவை என்று பெயர். பற்குழிகளை அடைப்பதற்கு பயன்படும் இரசக்கலவை -------- ( ***Ag-Sn இரசக்கலவை*** / Cu-Sn இரசக்கலவை )

93. உறுதிப்படுத்துதல் : தெர்மைட் பற்றவைப்பானில் அலுமினியத்துடன் $Fe_2O_3$ பயன்படுகிறது.
காரணம் : அலுமினியத்தூள் ஒரு வலிமையான ஒடுக்கும் காரணி.
காரணம் உறுதிப்படுத்துதலை விளக்கும் வகையில் சரியாக உள்ளதா ?
***விடை : காரணம் உறுதிப்படுத்துதலை விளக்கும் வகையில் சரியாக உள்ளது.***

94. உறுதிப்படுத்துதல் : கரிமச்சேர்மங்களில் உள்ள பிணைப்புகள் சகப் பிணைப்புத் தன்மை உடையவை.
காரணம் : சகப் பிணைப்பானது அணுவிலுள்ள எலக்ட்ரான்கள் பங்கிடப்படுவதால் உண்டாகிறது.
கொடுக்கப்பட்டுள்ள காரணம் உறுதிப்படுத்துவதற்கு போதுமானதாக உள்ளதா ?
**விடை : கொடுக்கப்பட்டுள்ள காரணம் உறுதிப்படுத்துவதற்கு போதுமானதாக உள்ளது.**

95. உறுதிப்படுத்துதல் : வைரம் என்பது கார்பனின் கடினமான புறவேற்றுமை வடிவம் ஆகும்.
காரணம் : வைரத்திடிலுள்ள கார்பன் நான்முகி வடிவம் உடையது.
கொடுக்கப்பட்டுள்ள உறுதிப்படுத்துதலுக்கு காரணம் சரியாக உள்ளதா ?
***விடை : கொடுக்கப்பட்டுள்ள காரணம் உறுதிப்படுத்துவதற்கு போதுமானதாக இல்லை.***

96. உறுதிப்படுத்துதல் : சுய சகப்பிணைப்பின் காரணமாக மிக அதிக அளவு கார்பன் சேர்மங்கள் உருவாகின்றன.
காரணம் : கார்பன் சேர்மங்கள் புறவேற்றுமை வடிவத்தின் பண்புகளைப் பெற்றுள்ளன. இந்தக் காரணம் உறுதிப்படுத்துதலுக்கு போதுமானதாக உள்ளதா ?
***விடை : இந்தக் காரணம் உறுதிப்படுத்துதலுக்கு போதுமானதாக இல்லை .***

97. பக்மினிஸ்டர் புல்லாரின் ---------- புறவேற்றுமை வடிவம் ( நைட்ரஜன் / ***கார்பன்*** / சல்ஃபர் )

98. கிராஃபைட் அலோகமாக இருந்தாலும் மின்சாரத்தைக் கடத்துகிறது. இது -------- காரணமாக கடத்துகிறது
( ***தனித்த எலக்ட்ரான்கள்*** / பிணைப்பு எலக்ட்ரான்கள் ).

99. மீத்தேனின் வாடீநுப்பாடு $CH_4$. அதனைத் தொடரும் அடுத்த $C_2H_6$ ஈத்தேன். இது இரண்டிற்குமுள்ள பொதுவான வேறுபாடு -----
( ***$CH_2$*** / $C_2H_2$ )

100. அல்கைன் குடும்பத்தில் உள்ள முதல் சேர்மத்தின் IUPAC பெயர் --------- ( ஈத்தீன் / ***ஈத்தைன்*** )

101. கீட்டோன் தொகுதி மற்றும் ஆல்டிஹைடு தொகுதியில் எந்த வினைசெயல் தொகுதி இறுதியில் உள்ளது. ***விடை : ஆல்டிஹைடு***

102. சோதனைக் குழாயில் வைக்கப்பட்டுள்ள X என்ற திடப்பொருளை அசிட்டிக் அமிலத்துடன் சேர்த்து சூடுபடுத்தும் போது Y என்ற நிறமற்ற, மணமற்ற வாயு வெளிவருகிறது. இந்த வாயு சுண்ணாம்பு நீரை பால் போல மாற்றுகிறது. X மற்றும் Y–ஐக் கண்டுபிடி ( பெயர் அல்லது வாய்ப்பாடு ), ***விடை :*** **$Na_2CO_3$ (or) $NaHCO_3$ $Y=CO_2$**

103. உறுதிபடுத்துதல் : எத்தனால் தன்இயல்பை இழத்தலால் அது குடிப்பதற்கு ஏற்றது அல்ல.
காரணம் : மெத்தனால் சேர்ப்பதால் எத்தனால் தன் இயல்பை இழக்கிறது.
மேற்கூறிய காரணம் உறுதி படுத்தலுக்கான சரியான விளக்கமா என்பதை சரிபார்க்கவும்.
***விடை : மேற்கூறிய காரணம் உறுதி படுத்தலுக்கான சரியான விளக்கம் ஆகும்.***

## இயற்பியல் – பகுதி – அ

104. _______ வரை பரிமாணமுள்ள பொருள்களின் பரிமாணங்களை அளக்க திருகு அளவி பயன்படுத்தப்படுகிறது.
( 0.1 cm., 0.01 cm., 0.1 mm., ***0.01 mm.*** )

105. திருகு அளவியில் தலைக்கோல் சுழிப்பிரிவு புரிக்கோலின் வரை கோட்டிற்கு கீழ் அமைகிறது. எனில் சுழிப்பிழை ___________
( ***நேர்க்குறி,*** எதிர்க்குறி, இல்லை )

106. திருகு அளவி _________________ ன் விட்டத்தை அளக்கப் பயன்படுகிறது.
( கடப்பாரை, ***மெல்லிய கம்பி,*** கிரிக்கெட் பந்து )

107. ஒரு ஒளி ஆண்டு என்பது _________________ ஆகும்.
( ***$365.25 \times 24 \times 60 \times 60 \times 3 \times 10^8$ m*** , $1 \times 24 \times 60 \times 60 \times 3 \times 10^8$ m ,$360 \times 24 \times 60 \times 60 \times 3 \times 10^8$ m )

108. வானியல் அலகு என்பது புவியின் மையத்திற்கும் _________________ ன் மையத்திற்கும் இடைப்பட்ட சராசரித் தொலைவு.
( நிலா, ***சூரியன்,*** செவ்வாய் )

109. ஒரு பொருளின் முடுக்கத்திற்குக் காரணம் ----------------.
( சமன் செய்யப்பட்ட விசை, ***சமன் செய்யப்படாத விசை,*** நிலைமின்னியல் விசை )

110. உந்த மாறுபாட்டு வீதத்திற்குச் சமமான இயற்பியல் அளவு _______. ( இடப்பெயர்ச்சி, முடுக்கம், ***விசை,*** கணத்தாக்குவிசை )

111. ஓய்வு நிலையிலுள்ள கனமான பொருளின் உந்தம் __________. ( மிக அதிகம், மிகக் குறைவு, ***சுழி,*** முடிவிலி )

112. புவிப்பரப்பில் 50 கி.கி. நிறையுள்ள மனிதனின் எடை ___________. ( 50 N, 35 N, 380 N, ***490 N*** )

113. உயிரி தொழில்நுட்ப ஊசி மருந்துகளைக் குளிரச் செய்யும் குளிரி தொழில்நுட்ப அமைப்புகள் ______________.
( ஹீலியம், ***நைட்ரஜன்,*** அம்மோனியா, குளோரின் )

114. 20 ஓம் மின்தடையுள்ள கம்பியில் 0.2 A மின்னோட்டம் உருவாக்கத் தேவைப்படும் மின்னழுத்த வேறுபாடு -----
(100 V, ***4 V***, 0.01 V, 40 V )

115. இரு மின்விளக்குகளின் மின்தடைகளின் விகிதம் 1 : 2. அவை தொடராக ஒரு சுற்றில் இணைக்கப்படுகின்றன எனில் அவை எடுத்துக் கொள்ளும் ஆற்றல்களின் விகிதம் ------ ( ***1 : 2***, 2 : 1, 4 : 1, 1 : 1 )

116. கிலோவாட் மணி என்பது -------ன் அலகு ஆகும். ( மின்னழுத்த வேறுபாடு, *மின்திறன்*, **மின்னாற்றல்** , மின்னூட்டம் )

117. ஒத்த நிபந்தனைகளில் ------- பரப்பு மற்ற பரப்புகளை விட அதிக வெப்பத்தை உட்கவர்கிறது.
( வெண்மை, சொரசொரப்பான, ***கருமை,*** மஞ்சள் )

118. இயற்கைக் கதிரியக்கத்தனிமத்தின் அணு எண் -----------
( ***82ஐ விட அதிகம்***, 82ஐ விடக் குறைவு, வரையறுக்கப்படவில்லை, குறைந்தது 92 )

119. ஆடியில் உருவாகும் உருவப்பெருக்கம் 1 / 3 எனில், அந்த ஆடியின் வகை ( ***குழி***, குவி, சமதளம் )

120. ஒரு கம்பிச்சுருளோடு தொடர்புடைய காந்தப்பாயம் மாறும் போதெல்லாம் அச்சுற்றில் மின்னியக்கு விசை உருவாகும் நிகழ்வு -----
( ***மின்காந்தத் தூண்டல்***, மின்னோட்டம் உருவாதல், மின்னழுத்தம் உருவாதல், மின்னோட்டம் மாற்றப்படுதல் )

121. உலோகக் கடத்தியில் பாயும் மின்னோட்டம் அதனைச் சுற்றி -------ஐ உருவாக்கும். ( வெப்பம், ஒளி, ***காந்தப்புலம்,*** எந்திர விசை )

122. பார்வைப்புலம் பெரும அளவாக அமைவது. ( சமதள ஆடியில், குழி ஆடியில், ***குவிஆடியில்*** )

123. 10 செ.மீ. குவியத்தூரமுள்ள குவி லென்சிலிருந்து 25 செ.மீ. தொலைவில் பொருள் வைக்கப்படுகிறது. பிம்பத்தின் தொலைவு --
( 50 செ.மீ., ***16.66 செ.மீ.***, 6.66 செ.மீ., 10 செ.மீ., )

*By,*

**S. Saravanan.M.Sc(PHY).,B.Ed., S.M.H.Hr.Sec.School. Sirkali-609110. Nagai-Dt.**

*By,*

**S.Saravanan. M.Sc( PHY).,B.Ed.,**
**S.M.H.Hr.Sec.School.**
**Sirkali-609110.**
**Nagapattinam Dist.**
**Cell:9786873729**